**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 61/2024**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஞானசேகரன்** | Date | : 05.03.2025 |
| Father Name | : **கலியபெருமாள்** | | : |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் நான் எனது மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 11 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமான புகாரை யார் யாருக்கு, என்னென்ன தேதியில் அனுப்பினேன் என்றால் 16.08.2020 அன்று பெரம்பூர் காவல் ஆய்வாளர், மயிலாடுதுறை கோட்டாச்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயிலாடுதுறை மற்றும் மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை ஆகியோர்களுக்கு அனுப்பினேன். வேறு யாருக்காவது நான் புகார் அனுப்பினேனா என்றால் இல்லை. எனக்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள இடப்பிரச்சனை சம்பந்தமாக அதிகாரிகள் உங்கள் ஊருக்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் அவர்களிடம் சிவில் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும்,. அது நிலுவையில் உள்ளதாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால், எனது அண்ணன் கனகசபை மற்றும் தம்பி சிவபிரகாசம் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி மனுவில் 3-1/2 செண்ட் நிலம் எனது தந்தை எனக்கு கொடுத்ததாக புகாரில் கூறியுள்ள விபரத்தை எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் எனது தந்தை எனக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன். அந்த உயில் பத்திரத்தை நான் உரிமையியல் வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை எனக்கு எந்த ஆண்டு உயில் எழுதிவைத்தார் என்றால் தற்போது நினைவில் இல்லை. மேற்படி உயில் பத்திரம் எனது தந்தை எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் நானே போலியாக ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வீட்டுவரி ரசீதும், மின்கட்டண ரசீதும் நானும், எனது மனைவியும் குடியிருந்து வரும் வீட்டிற்கான ரசீதுகள் என்றால் சரிதான்.

3. எங்கள் வீட்டு மாட்டுக்கொட்டகை அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மாட்டுக்கொட்டகைக்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை

என்றாலும், ,இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எழுதியவைத்த உயிலில் மாட்டுக்கொட்டகையையும் சேர்த்துதான் எழுதிக்கொடுத்துள்ளார். எதிரிகள் மற்றும் அந்த ஊரில் வசிக்கும் 40, 50 குடும்பத்தை சேர்ந்தவர்கள் அன்னவாசல் பிரதான சாலையை அடைவதற்கு செல்லும் வழியை நான் ஆக்கிரமித்து அடைத்து வைத்ததுதான் பிரச்சனைக்கு காரணம் என்றால் சரியல்ல. பிரச்சனைக்குரிய இடத்திற்காக புலவரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் எதிரிகளுக்கு எதிராக பெரம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தப்பட்ட வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் என்னையும், எனது மனைவியையும் தாக்கியததாகவும் அதற்காக நாங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் தாக்கல் செய்துள்ள சி.டியில் எதிரிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வேலியை பிரித்தார்கள் என்பதற்கும், மரங்களை வெட்டியதற்கும், மாடுகளை விரட்டி அடித்ததற்கும் ஆன புகைப்படங்கள் நான் தாக்கல் செய்துள்ள சி.டியில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சம்பவங்கள் எனது வீட்டிற்கு அருகில் நடந்தது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும்,. எங்கள் வீட்டு வேலியை பிரித்து எரியவில்லை என்றாலும், மரங்களை வெட்டவில்லை என்றாலும், மாடுகளை விரட்டி அடிக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் எனக்கும் உள்ள சிவில் பிரச்சனை காரணமாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**